# <u>தூத்துக்குடி மாநகராட்சி</u>

**<u>சாதாரண கூட்டப் பொருள்</u>**

**2022**ம் ஆண்டு செப்டம்பர் மாதம் **29**ம் நாள் வியாழக்கிழமை காலை **10.00** மணிக்கு **2008**ஆம் வருடத்திய தூத்துக்குடி மாநகராட்சி சட்டம் அட்டவணை **1** பிரிவு எண் **3(1)**ன் கீழ் தூத்துக்குடி மாநகராட்சி அலுவலகக் கட்டிடத்திலுள்ள மாமன்ற கூட்ட அரங்கத்தில் நடைபெறும் சாதாரணக் கூட்டத்தில் வைத்து நடைபெற்ற மாமன்ற கூட்ட நடவடிக்கைகள்.

## <u>பொருள்</u>

| மாமன்ற கூட்ட தேதி | மாமன்ற தீர்மானம் | தீர்மானம் |
|---|---|---|
| **26.08.2022** | **1)** தூத்துக்குடி மாநகராட்சிக்கு சொந்தமான சிவந்தாகுளம் மாநகராட்சி பள்ளியில் Special Child க்கான பள்ளிக்கு குழந்தைகளை அழைத்து வருவதற்கு இரண்டு எண்ணம் வேன்கள் TMB – யினரால் மாநகராட்சிக்கு தரப்பட்டுள்ளது. இரண்டு எண்ணம் பள்ளி வேன்களையும் இயக்குவதற்கு இரண்டு டிரைவர்கள் தேவைப்படுகிறார்கள். இரண்டு எண்ணம் ஓட்டுனர்களை நகர்புற வாழ்வாதார மையம் (CLC) மூலம் பணியமர்த்தி கொள்ளவும் இதற்காகும் ஓராண்டு **(17.08.2022** முதல் **16.08.2023** வரையிலான காலம்**)** செலவுத்தொகை ரூ.**330690/–** கல்வி நிதியிலிருந்து செலவு மேற்கொள்ளவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு :** மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>இ**5/3725/2022**(CLC) | **199)**அலுவலகக் குறிப்புஅனுமதிக் கப் பட்டது |

| | | |
|---|---|---|
| | 2) இம்மாநகராட்சி பகுதியான பி.எம்.சி பள்ளி அருகில் அமைந்துள்ள கழிவுநீரேற்றும் நிலையத்தில் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளுக்கு மாநராட்சியில் போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் மாவட்ட ஆட்சியர் அவர்களின் தினக்கூலி அடிப்படையில் மனித ஆற்றல்கள் நகர்ப்புற வாழ்வாதார மையம் (City Livelihood Centre) மூலம் தற்காலிகமாக பம்ப் ஆப்ரேட்டர் பணியிடத்திற்கு ஒரு எண்ணம் பணியாளர் தேவைப்படுகிறது.<br>நகர்ப்புற வாழ்வாதார மையம் (CLC) மூலம் ஒருவரை பம்ப ஆப்ரேட்டர் பணியில் (17.08.2022 முதல் 16.08.2023 வரையிலான காலம்) அமர்த்தி கொள்ளவும், இதற்காகும் தோராய செலவினம் ரூ.165345/—க்கும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு :** மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.இ5/3874/2012(CLC) | 200)அலுவலகக் குறிப்புஅனுமதிக் கப் பட்டது |
| | 3) இம்மாநகராட்சியில் செயல்படுத்தப்படும் – **15th CFC (Tied Grant) 2021-22**-ன் கீழ் Construction of Resource and Recovery Centre at Jothi Nagar (Area 1800 Sqm - ward No.2)பணிக்கு ஒப்பந்தபுள்ளி 23.08.2022 அன்று கோரப்பட்டதில் வரப்பட்ட இரண்டு நிறுவனங்களின் ஒப்பந்தபுள்ளி உறை 23.08.2022 அன்று 3.30 மணிக்கு திறக்கப்பட்டது.<br>மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில்நுட்பதகுதிகள் கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு நிறுவனங்களும் தொழில்நுட்ப தகுதிக்கு தேவையான ஆவணங்களை சமர்ப்பித்துள்ளதன் அடிப்படையில் தீர்மான எண் 401 நாள் 25.08.2022 ல் தொழில்நுட்பகமிட்டியால் அங்கீகரிக்கப்பட்டு 26.08.2022 அன்று விலைப்புள்ளி உறை திறக்க ஆணையர் அவர்களின் அனுமதி பெற்று திறக்கப்பட்டதின் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்கண்டவாறு,<br>1. M/s.S.R.Construction, Thoothukudi - நிறுவனம் மதிப்பீட்டைவிட 12.04% அதிகம் (ரூ. 1,90,31,845.00) | 201)அலுவலகக் குறிப்பு அ மற்றும் ஆ அனுமதிக்கப் பட்டது |

|  |  |  |
|---|---|---|
| | 2. Thiru.S.Rex, Thoothukudi - நிறுவனம் மதிப்பீட்டைவிட 14.92% அதிகம் (ரூ. 1,95,20,930.00)<br><br>M/s.S.R.Construction, Thoothukudi நிறுவனம் மதிப்பீட்டைவிட 12.04% சதவீதம் அதிகமாக கொடுத்துள்ளதால் மேற்படி L1 நிறுவனத்திடம் 01.09.2022 அன்று விலைகுறைப்பு செய்து கொடுக்க கோரப்பட்டதன் அடிப்படையில், நிறுவனத்திடம் 01.09.2022ஆம் தேதியன்று விலைகுறைப்பு செய்து கடிதம் கொடுத்துள்ளதன் அடிப்படையில் ஒப்புநோக்கு பட்டியல்விகிதம் கீழ்கண்டவாறு<br>1. M/s.S.R.Construction, Thoothukudi - நிறுவனம் மதிப்பீட்டைவிட 4.95% அதிகம் (ரூ. 1,78,27,550.00)<br><br>2. Thiru.S.Rex, Thoothukudi - நிறுவனம் மதிப்பீட்டைவிட 14.92% அதிகம் (ரூ. 1,95,20,930.00)<br><br>M/s.S.R.Construction, Thoothukudi நிறுவனம் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டைவிட 4.95% (ரூ.1,78,27,550.00 GST நீங்கலாக) அதிகமாக கொடுத்துள்ளார். பொறியியல் கையேடுபிரிவு IIவிதி எண் **2.7.2–**ல் பணியின் அவசர அவசியம் கருதி மதிப்பீட்டுத் தொகையினை விட கூடுதலாக 5% வரை மாமன்றம் அனுமதிக்க அதிகாரம் வழங்கி குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் தற்போதுள்ள **2022–23** விலைவிகிதத்தின்படி5.66 % குறைவாக உள்ளது. எனவே திட்ட பணியின் அவசர அவசியம் கருதி M/s.S.R.Construction, Thoothukudi நிறுவனம் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு**<br>1. திட்ட பணியின் அவசர அவசியம் கருதி மதிப்பீட்டைவிட 4.95% அதிகமாக கொடுத்த M/s.S.R.Construction, Thoothukudi நிறுவனத்தின் ஒப்பந்தபுள்ளியை ஏற்க மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>2. M/s.S.R.Construction, Thoothukudi நிறுவனத்திற்கு வேலை ஏற்பு கடிதம் மற்றும் வேலை உத்தரவு வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>**இ1/15116/2021** | |

| | | |
|---|---|---|
| | 4) இம்மாமன்ற தீர்மானம் எண்.106,107 நாள்.30.05.2022ன் படி இம்மாநகராட்சி வழக்குகளில் மாநகராட்சி சார்பில் ஆஜராகுவதற்கு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளை மாமன்ற வழக்கறிஞர் திரு.N.ஆனந்த குமார் மற்றும் மாவட்ட நீதிமன்ற மாமன்ற வழக்கறிஞர் திரு.G.சாம்வெல் ராஜேந்திரன் வழக்கறிஞர்கள் நியமனம் செய்யப்பட்டு வழக்குகள் நடத்தப்பட்டு வருகின்றன. மேற்படி வழக்கறிஞர்களுக்கு மாமன்றம் தீர்மானம் எண்.91 நாள்.01.05.2018ன் படி நிர்ணயம் செய்யப்பட்ட தொகை வழக்கறிஞர் கட்டணமாக வழங்கப்பட்டு வருகின்றது.<br>சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளை வழக்கறிஞருக்கு வழக்கு 1க்கு வழக்கறிஞர் கட்டணம் ரூ.7000/–ம் மற்றும் மாவட்ட நீதிமன்றம் மாமன்ற வழக்கறிஞருக்கு வழக்கு 1க்கு வழக்கறிஞர் கட்டணம் ரூ.4500/–ம் நிர்ணயம் செய்யவும் ஆரம்ப கட்ட நிலையில் வழக்கறிஞர் கட்டண தொகைளில் 50 சதவீதம் தொகையினை ஆரம்ப நிலையில் வழங்கிடவும் ஒவ்வொரு வழக்கின் முடிவில் தீர்ப்பு நகல் பெறப்பட்ட பின்னர் மீதம் 50 சதவீதம் தொகை வழக்கு கட்டணமாக வழங்கவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு** – 1. மாமன்றம் அனுமதிக்கலாம்<br>2.மாமன்ற தீர்மானம் எண்106, 107ன் படி மாமன்ற வழக்கறிஞராக நியமனம் செய்யப்பட்ட வழக்கறிஞர் நீதிமன்றத்தில் ஆஜராகி முடிவு பெற்ற வழக்குகளுக்கு வழங்கப்பட்ட வழக்கறிஞர் கட்டணத்திற்கு மாமன்றம் அனுமதிக்கலாம் | 202)அலுவலகக் குறிப்பு அ மற்றும் ஆ அனுமதிக்கப் பட்டது |

ந.க.எண்.சி5/13512/2004

5) தூத்துக்குடி மாநகராட்சிப் பகுதிகளில் குடிநீர் திட்டப் பணி மற்றும் பாதாள சாக்கடை திட்டப்பணிகளுக்காக தோண்டப்பட்ட சாலைகள் மற்றும் சேதமடைந்த சாலைகளை தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உள்கட்டமைப்பு திட்டம் 2022–2023 (TURIP)ன் கீழ் ரூ.1415.00 இலட்சம் மதிப்பீட்டில் கீழ்க்கண்டவாறு 8 சிப்பங்களாக பிரித்து பணிகளை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநரின் செயல்முறை ஆணை ந.க.எண் 24826/2022/SS2, நாள் 07.09.2022ன் படி நிர்வாக அனுமதி பெறப்பட்டதை தொடர்ந்து, தலைமைப்பொறியாளர், சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநரகம் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண் 001/2022/DO1, நாள் 09.09.2022ன் படி ரூ.1329.03 இலட்சத்திற்கு தொழில் நுட்ப அனுமதி வழங்கி உத்திரவிடப்பட்டுள்ளது .

| வ. எண் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில் | மதிப் எ |
|---|---|---|---|
| 1 | தூத்துக்குடி மாநகராட்சி பகுதிக்கு உட்பட்ட ராம் நகர் இரண்டாவது தெரு (138002R0150, L-192M, W-4.50 M) ராம் நகர் இரண்டாவது தெரு முதலாவது குறுக்கு தெரு சாலை (13800R0151, L-110M, W-4.50M) ராம் நகர் இரண்டாவது தெரு இரண்டாவது குறுக்கு சாலை (138002R0152 L-50M, W-4.50M) ராம் நகர் இரண்டாவது தெரு மூன்றாவது குறுக்கு தெரு (138002R0153 L-40M, W-4.50M) ராம் நகர் இரண்டாவது தெரு நான்காவது குறுக்கு தெரு சாலை (138002R0154 L-100M, W-4.50M) ரகமத் நகர் இரண்டாவது தெரு (138002R0155 L-430 M, W-4.50M) ரகமத் நகர் நான்காவது இணைப்பு சாலை (138002R0156 L-125M, W-4.50M) ரகமத் நகர் நான்காவது தெரு முதலாவது இணைப்பு சாலை எதிரில் (138002R0157 L-151M, W-4.50M) ஆர் எஸ் பி நகர் OHT வடக்கு பகுதி முதலாவது குறுக்கு தெரு (138003R0297 L-345M, W-4.50M) ஆர் எஸ் பி நகர் OHTவடக்கு பகுதி | 177.00 | 389/20 |

203)அலுவலகக் குறிப்பு பதிவு செய்யப்பட்டது

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | இரண்டாவது குறுக்கு தெரு (138003R0298 L-125M, W-4.50M) ஆர் எஸ் பி நகர் மெயின் ரோடு (138003R0300 L-350M, W-4.50M) ஆகிய பகுதிகளில் தார்சாலை மேம்படுத்தும் பணி **(சிப்பம்–1)** | | | | |
| | | 2 | தூத்துக்குடி மாநகராட்சி பகுதிக்கு உட்பட்ட ஹவுசிங் போர்டு இரண்டாவது குறுக்கு தெரு (138003R0256 L-140M, W-4.50M) தனா கார் மெயின் ரோடு (138003R0259 L-215M, W-4.50M) தனா கார் மெயின் ரோடு முதலாவது இணைப்பு சாலை (138003R060 L-380M, W-4.50M) ஹவுசிங் போர்டு பார்க் 2 சுற்றுப்பகுதி (138003R0264 L-265M, W-4.50M) ஹவுசிங் போர்டு பார்க் 2 சுற்றுப்பகுதி (138003R0265 L-30M, W-4.50M) ஹவுசிங் போர்டு பார்க் 2 (138003R0266 L-100M, W-4.50M) ஹவுசிங் போர்டு பார்க் 2 சுற்றுப்பகுதி (138003R0272 L-315M, W-4.50M) வடக்கு ராஜா மெயின்ரோடு (138025R1338 L-150M, W-4.00M) காளியப்பர் தெரு (வடக்கு ராஜா தெரு) (138025R1332 L-425M, W-4.00M) வடக்கு பீச் ரோடு (Chanage 330-1123 (138025R1342 L-200M, W-4.00M) சின்னகுடி தெரு (138025R1337 L-220M, W-4.00M) குருஸ்புரம் இரண்டாவது மேற்கு மெயின் ரோடு (138024R1302 L-195M,W-4.00M) ஆகிய பகுதிகளில் தார்சாலை மேம்படுத்தும் பணி **(சிப்பம்–2)** | 170.86 | 390/2022–23 | | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 3 | தூத்துக்குடி மாநகராட்சி பகுதிக்கு உட்பட்ட திரேஸ்புரம் மேட்டுப்பட்டி மெயின் ரோடு (138008R0559 L-132M) மேட்டுப்பட்டி பள்ளிவாசல் மெயின் ரோடு (138008R0579 L-240M) மாதா நகர் காலனி மெயின் ரோடு (138008R0598 L-265M) மாதா நகர் காலனி முதலாவது தெரு முதல் இரண்டாவது இணைப்பு சாலை வரை (138008R0599 L-30M) எஸ்பிஐ காலனி **60**அடி மெயின் ரோடு முதல் போல்பேட்டை மெயின் ரோடு வரை (138012R0716 L-470M) போல்பேட்டை வடக்கு முதல் தெற்கு சாலை முதலாவது தெரு வரை **(** முத்தாரம்மன் கோவில் முன்பக்க சாலை (138012R2514 L-85M) போல்பேட்டை வடக்கு முதல்தெற்கு சாலை முதல் தெரு ஐந்தாவது குறுக்கு சாலை **(** முத்தாரம்மன் கோவில் எதிர்புறம் சாலை**)** (138012R2518 L-55M) போல்பேட்டை மேற்கு மெயின் ரோடு (138013R0756 L-335M) குறிஞ்சி நகர் இரண்டாவது தெரு மேற்கு (138013R0764 L-105M) குறிஞ்சி நகர் எழாவது தெரு (138013R0770 L-265M) குறிஞ்சி நகர் ஐந்தாவது தெரு முதல் ஆறாவது தொடர்ச்சி சாலை வடக்கு /தெற்கு முதல் தெரு (138013R0788 L-40M) போல்பேட்டை வடக்கு முதல் தெற்கு சாலை இரண்டாவது தெரு இரண்டாவது குறுக்கு சாலை **(**138020R1213 L-68M**)** போல்பேட்டை வடக்கு முதல் தெற்கு சாலை இரண்டாவது தெரு மூன்றாவது குறுக்கு சாலை (138020R1214 L-50M) போல்பேட்டை வடக்கு முதல் தெற்கு சாலை இரண்டாவது தெரு நான்காவது குறுக்கு சாலை (138020R1215 L-75M) ஆகிய பகுதிகளில் தார்சாலை மேம்படுத்தும் பணி **(**சிப்பம்**–3)** | 165.03 | 391/2022–23 | | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | 4 | தூத்துக்குடி மாநகராட்சி பகுதிக்கு உட்பட்ட அண்ணா நகர் ஒன்பதாவது தெரு மேற்கு (Unicode: 138031R1511, Length = 415.00M) அண்ணா நகர் எட்டாவது தெரு கிழக்கு (Unicode: 138031R1478, Length = 439.00M) பிரையண்ட் நகர் முதலாவது தெரு மேற்கு (Unicode: 138044R1888, Length = 235.00M) பிரையண்ட் நகர் இரண்டாவது தெரு மேற்கு (Unicode:138044R1889, Length = 235.00M) பிரையண்ட் நகர் மூன்றாவது தெரு மேற்கு (Unicode:138044R1892, Length = 230.00M) பிரையண்ட் நகர் நான்காவது தெரு மேற்கு (Unicode:138044R1895, Length = 240.00M) ஆகிய பகுதிகளில் தார்சாலை மேம்படுத்தும் பணி (சிப்பம்–4) | 157.43 | 392/2022–23 | | |
| | | 5 | தூத்துக்குடி மாநகராட்சி பகுதிக்கு உட்பட்ட சின்னமணி நகர் முதலாவது தெரு (Unicode: 138033R1557, Length = 233.00M) சின்னமணி நகர் இரண்டாவது தெரு (Unicode: 138033R1558, Length = 212.00M) சின்னமணி நகர் இரண்டாவது தெரு குறுக்கு தெரு 1 (Unicode: 138033S0796 Length = 116.00M) சின்னமணி நகர் இரண்டாவது தெரு குறுக்கு தெரு 2 (Unicode: 138033S0797 Length = 121.00M) சின்னமணி நகர் இரண்டாவது தெரு குறுக்கு தெரு 3 (Unicode: 138033S0798 Length = 110.00M) மில்லர்புரம் ஸ்பினிங் மில் சாலை (Unicode: 138033R1549 Length = 669.00M) மில்லர்புரம் ஸ்பினிங் மில் சாலை குறுக்கு தெரு 1 (Unicode: 138033R1550 Length = 114.00M) மில்லர்புரம் ஸ்பினிங் மில் சாலை குறுக்கு தெரு 2 (Unicode: 138033R1551 Length = 122.00M) மில்லர்புரம் ஸ்பினிங் மில் சாலை குறுக்கு முதல் மற்றும் இரண்டாவது இணைப்பு சாலை (Unicode: 138033R1552 Length = 120.00M) | 172.56 | 393/2022–23 | | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | மில்லர்புரம் ஸ்பினிங் மில் சாலை குறுக்கு தெரு **3** (Unicode: 138033R1553 Length = 170.00M) மில்லர்புரம் ஸ்பினிங் மில் சாலை குறுக்கு தெரு **5** (Unicode: 138033R1554 Length = 142.00M) மில்லர்புரம் ஸ்பினிங் மில் சாலை குறுக்கு தெரு **6** (Unicode: 138033R1555 Length = 128.00M) மில்லர்புரம் ஸ்பினிங் மில் சாலை குறுக்கு தெரு **8** (Unicode: 138033R1556 Length = 64.00M) ஆகிய பகுதிகளில் தார்சாலை மேம்படுத்தும் பணி **(சிப்பம்–5)** | | | | |
| | | 6 | தூத்துக்குடி மாநகராட்சி பகுதிக்கு உட்பட்ட ஆசிரியர்காலனி கிழக்கு முதலாவது தெரு (Unicode: 138034S0822 Length = 53.00M) ஆசிரியர்காலனி கிழக்கு இரண்டாவது தெரு (Unicode: 138034S0823 Length = 53.00M) ஆசிரியர்காலனி கிழக்கு மூன்றாவது தெரு (Unicode: 138034S0824 Length = 53.00M) ஆசிரியர்காலனி கிழக்கு நான்காவது தெரு(Unicode: 138034S0825 Length = 53.00M) ஆசிரியர்காலனி கிழக்கு ஐந்தாவது தெரு (Unicode: 138034S0826 Length = 107.00M) ஆசிரியர்காலனி கிழக்கு ஆறாவதுதெரு (Unicode: 138034S0827 Length = 107.00M) ஆசிரியர்காலனி கிழக்கு ஏழாவது தெ (Unicode: 138034S0828 Length = 107.00M) ஆசிரியர்காலனி கிழக்கு எட்டாவது தெரு (Unicode: 138034S0829 Length = 95.00M) ஆசிரியர்காலனி மேற்கு மெயின் ரோடு (Unicode: 138034R1593 Length = 395.00M) ஆசிரியர்காலனி மேற்கு முதலாவது தெரு (Unicode: 138034R1592 Length = 355.00M) ஆசிரியர்காலனி மேற்கு இராண்டாவது (Unicode: 138034R1591 Length = 158.00M) ஆசிரியர்காலனி மேற்கு | 147.01 | 394/2022–23 | | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | இரண்டாவது மற்றும் மூன்றாவது தெரு (Unicode: 138034S0832 Length = 43.00M) ஆசிரியர்காலனி மேற்கு மூன்றாவது தெரு (Unicode: 138034S0831 Length = 102.00M) ஆசிரியர்காலனி மேற்கு நான்காவது தெரு (Unicode: 138034S0830 Length = 57.00M) ஆசிரியர்காலனி மேற்கு முதல் மற்றும் இரண்டாவது தெரு 1 (Unicode: 138034S0833 Length = 43.00M) ஆசிரியர்காலனி மேற்கு முதல் மற்றும் இரண்டாவது தெரு 2 (Unicode: 138034S0834 Length = 42.00M) ஆசிரியர்காலனி மேற்கு முதலாவது தெரு குறுக்கு தெரு 1 (பக்கிள் ஓடை அருகில்) (Unicode: 138034R1610 Length = 32.00M) ஆசிரியர்காலனி மேற்கு முதலாவது தெரு குறுக்குதெரு 2 (பக்கிள் ஓடை அருகில்) (Unicode: 138034R1611 Length = 19.00M) ஆசிரியர்காலனி மேற்கு முதலாவது தெரு குறுக்கு தெரு 3 (பக்கிள் ஓடை அருகில்) (Unicode: 138034R1612 Length = 114.00M) ஆகிய பகுதிகளில் தார்சாலை மேம்படுத்தும் பணி (சிப்பம்–6) | | | | |
| | | 7 | தூத்துக்குடி மாநகராட்சி பகுதிக்கு உட்பட்ட அழகேசபுரம் கிழக்கு/மேற்கு குறுக்கு முதலாவது தெரு<br>Unicode: 138021R1251 L - 60.m, W - 4.5m நடராஜபுரம் வடக்கு/தெற்கு மூன்றாவது தெரு<br>Unicode: 138021R125 L -96.m - 4.5m நந்தகோபாலபுரம் மெயின் முதல் அழகேசபுரம் மெயின் சாலை<br>Unicode: 138021R1246 L - 425.m, W - 4.5m நடராஜபுரம் வடக்கு/தெற்கு இராண்டாவது தெரு<br>Unicode: 138021R1249 L - 140.m, W - 4.5m நடராஜபுரம் வடக்கு/தெற்கு முதலாவது தெரு<br>Unicode: 138021R1248 L - 185.m, W - 4.5m அழகேசபுரம் கிழக்கு/மேற்கு குறுக்கு இராண்டாவது தெரு | 172.14 | 395/2022–23 | | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | Unicode: 138021R1252 L - 60.m, W - 4.5m நடராஜபுரம் வடக்கு/தெற்கு சாலை Unicode: 138021R1247 L - 265.m, W - 4.5m நந்தகோபாலபுரம் கிழக்கு நான்காவது தெரு Unicode: 138021R1243 L - 140.m, W - 4.5m நந்தகோபாலபுரம் கிழக்கு மூன்றாவது தெரு Unicode: 138021R1241 L - 140.m, W - 4.5m அழகேசபுரம் வடக்கு/தெற்கு மெயின் ரோடு முதல் அமெரிக்கன் மருத்துவமனை சாலை Unicode: 138021R1254 L - 400.m, W - 6m நந்தகோபாலபுரம் மெயின் ரோடு Unicode: 138021R1238 L - 485.m, W - 4.5m ஆகிய பகுதிகளில் தார்சாலை மேம்படுத்தும் பணி (சிப்பம்–7) | | | | |
| | | 8 | தூத்துக்குடி மாநகராட்சி பகுதிக்கு உட்பட்ட பங்களா தெரு Unicode: 138043R1857 L - 225.m, W - 4.5m பங்களா தெரு முதலாவது குறுக்கு தெரு Unicode: 138043R1858 L - 83.m, W - 4.5m பங்களா தெரு இரண்டாவது குறுக்கு சந்து 3 வடக்கு பகுதி Unicode: 138043R1860 L - 92.m, W -3.5m பங்களா தெரு மூன்றாவது குறுக்கு தெரு Unicode: 138043R1861 L - 85.m, W -4.5m பக்கிள்புரம் முதலாவது தெரு Unicode: 138043R1862 L - 220.m, W -4.5m பக்கிள்புரம் இரண்டாவது தெரு Unicode: 138043R1863 L - 217.m, W -4.0m பக்கிள்புரம் மூன்றாவது தெரு Unicode: 138043R1864 L - 208.m, W -4.5m பங்களா தெரு இரண்டாவது குறுக்கு சந்து 1 தெற்கு பகுதி Unicode: 138043S0920 L - 38.m, W -3.5m பக்கிள்புரம் நான்காவது தெரு Unicode: 138043R1866 L - 196.m, W -4.5m லெவிஞ்சிபுரம் OHT நீர்த்தேக்க தொட்டி சாலை Unicode: 138043R1867 L - 190.m, W -4.5m லெவிஞ்சிபுரம் இரண்டாவது தெரு முதல் லெவிஞ்சிபுரம் OHT சாலை | 167.00 | 396/2022–23 | | |

| | | |
|---|---|---|
| | Unicode: 138045R1911 L -271.m, W -4.5m லோகியா நகர் கிழக்கு மேற்கு முதலாவது குறுக்கு தெரு Unicode: 138043R1869 L -127.m, W -4.5m முனியசாமிபுரம் Unicode: 138043R1872 L -100.m, W -4.5m முனியசாமிபுரம் Unicode: 138045R1918 L -100.m, W -4.5m லெவிஞ்சிபுரம் தொடர்ச்சி B/W முதலாவது மற்றும் இரண்டாவது தெரு Unicode: 138045R1944 L -60, W -4.5m முனியசாமிபுரம் இரண்டாவது தெரு Unicode: 138043R1873 L -317, W -4.0m ஆகிய பகுதிகளில் தார்சாலை மேம்படுத்தும் பணி **(சிப்பம்–8)**<br>மொத்தம் — **1329.03**<br><br>இதன்படி மேற்கண்ட சாலை பணிகளை மேற்கொள்ள சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநரகத்திடமிருந்து வரப்பெற்ற நிர்வாக அனுமதி மற்றும் தொழில் நுட்ப அனுமதி மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு** : மாமன்றம் பதிவு செய்யலாம்.<br>இ1/ 1434 / 2020 | |
| | 6) தூத்துக்குடி மாநகராட்சி மாமன்றத்தின் 08.04.2022 ம் தேதி 86ஆம் எண் தீர்மானத்தில் இம்மாநகராட்சிக்குப் பாத்தியப்பட்ட சத்திரம் தெரு மற்றும் தெற்கு கடற்கரை சாலை ரோச் பூங்கா அருகில் (Kiosk shop) கடைகளுக்கு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர அனுமதியளிக்கப்பட்டது. உரிமம் ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டு காலத்திற்கு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 29.08.2022 அன்று நடைபெறும் என தெரிவித்து தினமலர் நாளிதழில் 14.08.2022 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டது.<br><br>அதன்பேரில் 29.08.2022 (திங்கள் கிழமை) அன்று மாலை 2 மணி முதல் 3.00 மணி வரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. இதனைத் தொடர்ந்து ஏலம் கோர எந்த நபரும் விண்ணப்பிக்காத நிலையில் மாலை 3.30 மணியளவில் ஒப்பந்தப்புள்ளிதாரர்கள் முன்னிலையில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் ஆணையர் அவர்களால் திறக்கப்பட்டது. மேற்படி ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்ட | 204) அலுவலகக் குறிப்பு அ மற்றும் ஆ வில் குறிப்பிடப்பட்டுள்ள உயர்ந்த பட்ச ஒப்பந்தபுள்ளி தொகையானது ஏற்கப்பட்டு உரிமம் வழங்க அனுமதிக்கப்பட்டது, |

<table>
<tr>
<td></td>
<td>
விபரப்படி வரப்பெற்றுள்ளது.<br>
<u>வரிசை எண்.1</u><br>
சத்திரம் தெரு கடை எண்.7க்கான உரிமத்திற்கு கீழ்க்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.
<table>
<tr><th>வ.எண்</th><th>காப்புத்தொகை செலுத்தி ஒப்பந்தப்புள்ளி வழங்கியவர் பெயர் (ம) முகவரி</th><th>மாநகராட்சியால் நிர்ணயம் செய்யப்பட்ட ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி ஆரம்ப மாத வாடகை தொகை ரூ.</th></tr>
<tr><td>1.</td><td>திரு. குமாரசாமி,<br>113D, முத்துகிருஷ்ணாபுரம் 2வது தெரு, தூத்துக்குடி</td><td rowspan="2">6,000/–</td></tr>
<tr><td>2.</td><td>திரு. செல்வகுமார்,<br>113D, முத்துகிருஷ்ணாபுரம் 2வது தெரு, தூத்துக்குடி</td></tr>
</table>
அ) மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.குமாரசாமி என்பவரால் கோரப்பட்டுள்ள ரூ.6,500/–ம் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகையானது மாநகராட்சியால் நிர்ணயம் செய்யப்பட்ட ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி ஆரம்ப மாத வாடகை தொகையை காட்டிலும் கூடுதலாக உள்ளது. எனவே
</td>
<td></td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | மாமன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**<u>வரிசை எண்.2</u>**<br>தெற்கு கடற்கரை சாலை ரோச் பூங்கா அருகில் (Kioskshop) கடை எண்.1 க்கான உரிமத்திற்கு கீழ்க்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. | |

| வ. எண் | காப்புத்தொகை செலுத்தி ஒப்பந்தப்புள்ளி வழங்கியவர் பெயர் (ம) முகவரி | மாநகராட்சியால் நிர்ணயம் செய்யப்பட்ட ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி ஆரம்ப மாத வாடகை தொகை ரூ. | வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிடப்பட்டுள்ள மாத வாடகை தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | திரு. வெங்கடேஷ், 83/15, முத்துகிருஷ்ணாபுரம் 6வது தெரு, தூத்துக்குடி. | 6,500/– | 6,600/– |
| 2. | திரு. ஜோயல், 83A/2 முத்துகிருஷ்ணாபுரம் 6வது தெரு, தூத்துக்குடி | | 6,800/– |

ஆ) மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.ஜோயல் என்பவரால் கோரப்பட்டுள்ள ரூ.6,800/–ம் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகையானது மாநகராட்சியால் நிர்ணயம் செய்யப்பட்ட ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி ஆரம்ப மாத வாடகை தொகையை காட்டிலும் கூடுதலாக உள்ளது. எனவே மாமன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** அ மற்றும் ஆ மாமன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

அ16/2739/2019

| | | |
|---|---|---|
| | 7) தூத்துக்குடி மாநகராட்சி மாமன்றத்தின் 29.07.2022ம் தேதிய 171ஆம் எண் தீர்மானத்தில் இம்மாநகராட்சிக்குப் | 205)அலுவலகக் குறிப்பு உயர்த்தப்பட்ட |

| | | |
|---|---|---|
| | பாத்தியப்பட்ட வல்லநாடு தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள பலன்தரும் மரங்களின் மகசூல் அனுபவிக்கும் உரிமம் ஆகிய குத்தகை இனங்களுக்கு மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர அனுமதியளிக்கப்பட்டது. மேற்படி குத்தகை இனத்திற்கு ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டுகளுக்கு (2022–2025) அனுபவ உரிமத்திற்கான மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 29.08.2022 அன்று நடைபெறும் என தெரிவித்து இம்மாநகராட்சி மைய அலுவலக மற்றும் அனைத்து மண்டல விளம்பர பலகையில் 12.08.2022 அன்று விளம்பர அறிவிப்பு வெளியிடப்பட்டது.<br>அதன்பேரில் 29.08.2022 (திங்கட்கிழமை) அன்று மாலை 2 மணி முதல் 3மணி வரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. இதனைத் தொடர்ந்து ஏலம் கோர எந்த நபரும் விண்ணப்பிக்காத நிலையில் மாலை 3.30 மணியளவில் ஒப்பந்தப்புள்ளிதாரர்கள் முன்னிலையில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் ஆணையர் அவர்களால் திறக்கப்பட்டது. மேற்படி ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்றுள்ளது.<br>வல்லநாடு தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள பலன்தரும் மரங்களின் மகசூல் அனுபவிக்கும் உரிமத்திற்கு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. | ஒப்பந்தப்புள்ளி தொகையானது ஏற்கப்பட்டு உரிமம் வழங்க அனுமதிக்கப்பட்டது |

| வ. எண் | காப்புத்தொகை செலுத்தி ஒப்பந்தப்புள்ளி வழங்கியவர் பெயர் (ம) முகவரி | முந்தைய ஆண்டு குத்தகை தொகை ரூ. | மாநகராட்சியால் நிர்ணயம் செய்யப்பட்ட ஆரம்ப ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிடப்பட்டுள்ள தொகை ரூ. |
|---|---|---|---|---|

<table>
<tr><td></td><td>
<table>
<tr><td>1.</td><td>திரு. G.பியோகாட்வின், 1H/1304, பாரதிநகர் 4வது தெரு, தூத்துக்குடி</td><td rowspan="2">13,230 /–</td><td rowspan="2">14,00 0/–</td><td>14,200/–</td></tr>
<tr><td>2.</td><td>திரு. A.ஞானராஜ், 2/29, தெற்கு தெரு, கோரம்பள்ளம், தூத்துக்குடி–2</td><td>5,000/–</td></tr>
</table>
<br>
மேற்படி வல்லநாடு தலைமை நீரேற் நிலையத்தில் உள்ள பலன்தரும் மரங்களின் மகசூ அனுபவிக்கும் உரிமத்திற்கு உயர்ந்த பட்ச ஒப்பந்தப்புள் தொகை ரூ.14,200/– திரு. பியோகாட்வின் என்பவரா கோரப்பட்டுள்ளது. மேற்படி உயர்ந்த பட்ச ஒப்பந்தப்புள் தொகையானது முந்தைய ஆண்டு குத்தகை தொகை மற்று தற்போது மாநகராட்சியால் நிர்ணயம் செய்யப்பட்ட ஆரம்ப ஏல மற்றும் ஒப்பந்தப்புள்ளி தொகையை காட்டிலும் கூடுதலா உள்ளது. எனவே மாமன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கு வைக்கப்படுகிறது.
<br><br>
<u>அலுவலக குறிப்பு</u> மாமன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.
<br><br>
அ16/2568/2022
</td><td></td></tr>
<tr><td></td><td>8) இம்மாநகராட்சி நகராட்சியாக இருந்து 05.08.2008 முதல் மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்ட போது அருகில் உள்ள தூத்துக்குடி ரூரல், சங்கரபேரி, மீளவிட்டான், முத்தையாபுரம் மற்றும் அத்திமரப்பட்டி ஆகிய 5 பஞ்சாயத்துகள் பகுதிகள் சேர்த்து 60 வார்டுகள் உள்ளடங்கியதாகும். மாநகராட்சிக்கான அடிப்படை பணிகளுக்கு தேவையான பணியாளர்கள் அரசிடமிருந்து அனுமதிக்கப்படவில்லை. இந்நிலையில் மாநகராட்சி பொது சுகாதாரம் திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்ள போதிய நிரந்தர துப்புரவு பணியாளர்கள் இல்லாத நிலையில் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை எண் 24100/பி3/2017, நாள் 31.10.2017ன் படி அனுமதிக்கப்பட்ட பணியிடங்களில் ஏற்படும் காலி இடங்களை தனியார் மூலமாக மாமன்ற அனுமதியுடன் Tender Act Rules 2000ன்</td><td>206)அலுவலகக் குறிப்புஅனுமதிக் கப் பட்டது</td></tr>
</table>

படி ஒப்பந்தப்புள்ளி பெற்று நடவடிக்கை எடுக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், இதற்கு நகராட்சி நிர்வாக ஆணையரிடம் அனுமதி ஏதும் பெற தேவை இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, மாநகராட்சியில் அனுமதிக்கப்பட்ட பணியிடம் மற்றும் இதர பணிகளுக்கு தேவையான பணியாளர்கள் கீழ்கண்டவாறு நகர்ப்புற வாழ்வாதார மையம் (clc) மூலம் மாவட்ட ஆட்சியர் அவர்களால் அனுமதிக்கப்பட்ட தினக்கூலியின் அடிப்படையில் 2018–2019 ஆண்டு விலை விகிதத்தின்படி பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

| வ. எண் | பணி விபரம் | பணியாளர் எண்ணிக்கை | இதுவரை வழங்கப்பட்ட ஊதியம் ரூ. | 2022–23 வருடம் தற்போது வழங்கப்பட வேண்டிய ஊதியம் ரூ. | ஏழு மாதம் (212நாட்கள்) ரூபாய் |
|---|---|---|---|---|---|
| 1. | துப்புரவு பணியாளர்கள் | 630 | 354.00 | 433.00 | 5,78,31,480.00 |
| 2. | பள்ளி கழிவறை பராமரிப்பு தூய்மை பணியாளர்கள் | 37 | 354.00 | 433.00 | 33,96,452.00 |
| 3. | கம்போஸ்ட் சூப்பர்வையாளர் | 1 | 400.00 | 490.00 | 1,03,880.00 |
| 4. | டெங்கு கொசு ஒழிப்பு பணியாளர்கள் | 150 | 320.00 | 417.00 | 1,32,60,600.00 |
| 5. | மேற்பார்வையாளர் | 70 | 400.00 | 490.00 | 72,71,600.00 |
| 6. | TATA ACE வாகன ஓட்டுனர் | 169 | 426.00 | 521.00 | 1,86,66,388.00 |
| 7. | ஜெசிபி வாகன ஓட்டுனர் | 1 | 554.00 | 554.00 | 1,17,448.00 |

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td>8.</td><td>தூய்மை காவலர்கள்</td><td>16</td><td>481.00</td><td>573.00</td><td>19,43,616.00</td></tr>
<tr><td>9.</td><td>சுகாதார பிரிவு கணிணி இயக்குபவர்</td><td>16</td><td>481.00</td><td>573.00</td><td>19,43,616.00</td></tr>
<tr><td></td><td>மொத்தம்</td><td></td><td></td><td></td><td>10,45,35,080.00</td></tr>
</table>
<br>
மேற்படி பணியிடங்களுக்கான மாமன்ற அனுமதி 31.10.2022 உடன் நிறைவு பெறுகிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடிதம் ந.க.எண் கே3/1661/2022, நாள் 10.08.2022, கடிதத்தில் தெரிவிக்கப்பட்ட 2022–2023ம் ஆண்டின் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் நிர்ணயம் செய்யப்படும் தினக்கூலி விலைவிகிதப்பட்டியலின்படி மேற்படி அனைத்து தற்காலிக தினக்கூலிப் பணியாளர்களுக்கு 26.08.2022 முதல் 25.03.2023 வரையிலான காலத்திற்கு பணியமர்த்திக் கொள்ள அனுமதிக்கவும், மேலும், அதற்குரிய உத்தேச செலவினம் ரூ.10.50கோடிக்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
<br><br>
அலுவலகக் குறிப்பு : –26.08.2022 முதல் 25.03.2023 வரை நகர்ப்புற வாழ்வாதார மையம் (CLC) மூலம் பணியாளர்களை பணியமர்த்திக் கொள்ளவும், அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.10.50கோடிக்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்.
<br><br>
எச்1/296/2018
</td>
<td></td>
</tr>
<tr>
<td></td>
<td>9) இம்மாநகராட்சி மைய மற்றும் மண்டல அலுவலகங்களில் நடைபெறும் அலுவலக பணிகள் முற்றிலும் கணினி மயமாகிவிட்டதால், வருவாய் மற்றும் குடிநீர் பணிகளை (கேட்பு எழுப்புதல்) மேற்கொள்ளவும், பொறியியல் பிரிவு பணிக்கான மதிப்பீடு தயாரிப்பது மற்றும் சொத்து வரி பொது சீராய்வு பணியினை கணினியில் பதிவேற்றம் செய்யும் பணிகளை விரைந்து முடிக்கவும் போதிய பணியாளர்கள் மாநகராட்சியில் இல்லாததால், தூத்துக்குடி மாவட்ட</td>
<td>207)அலுவலகக் குறிப்புஅனுமதிக்கப் பட்டது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | ஆட்சியர் அவர்களின் செயல்முறை 2020– 2021ம் ஆண்டு நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி அடிப்படையில் நகர்புற வாழ்வாதார மையம் (City livelihood centre) மூலம் கணினி இயக்குபவர்கள் (Data Entry Operator) கணினி பிரிவு மற்றும் மண்டல அலுவலகங்களுக்கு தற்காலிக ஊதியம் அடிப்படையில் 8 கணினி இயக்குபவர்கள், மாமன்ற தீர்மான எண் 72, நாள்.08.04.2022ன் படி அனுமதிக்கப்பட்டுள்ளது.<br>2022 – 2023ம் ஆண்டு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணையின் படி நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி ரூ.573/–, மேற்கண்ட கணினி இயக்குபவர்களாக பணிபுரியும் 8 நபர்களுக்கு, 09.09.2022 முதல் வழங்குவதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. அதற்கான உத்தேச செலவினத்தொகை ஆண்டிற்கு ரூ.16.00 இலட்சத்திற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு :** இம்மாநகராட்சியில் நகர்ப்புற வாழ்வாதார மையம் (CLC) மூலம் பணியமர்த்தப்பட்ட கணினி இயக்குபவர்கள் 8 நபர்களுக்கு, 2022 – 2023ம் ஆண்டு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி ரூ.573/– வழங்குவதற்கும், அதனை 09.09.2022 முதல் வழங்கவும், மேற்கண்ட செலவினத்தொகை ரூ.16.00 இலட்சத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>இ5/1576/2018 | |
| | 10) தூத்துக்குடி மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட வி.எம்.எஸ் நகர், மேற்கு மண்டலத்திற்குட்பட்ட நிகிலேசன் நகர், இராஜகோபால நகர், மில்லர்புரம் ஹவுசிங் போர்டு , காந்தி நகர், சந்திரேசன் நகர், ஹரிராம் நகர், பாரதி நகர் மற்றும் புஷ்பா நகர் ஆகிய பகுதிகளில் சுமார் 4115 வீடுகள் உள்ளன. இப்பகுதியில் சுமார் 16000 மக்கள் வசிக்கின்றனர்.<br>மேற்படி பகுதிகளில் வசிக்கும் பொது மக்கள் சிரமத்தைப்போக்குவதற்கு தூத்துக்குடி – மீளவிட்டான் இரயில் நிலையத்திற்கும் இடையே கி.மீ. 649/700–800 இரயில்வே வழித்தடத்தில் சுரங்கப்பாதை (Sub-way) தென்னக இரயில்வே துறையினர் மூலமாக அமைப்பதற்கும் சுரங்கப்பாதை அமைப்பதற்குரிய மதிப்பீட்டுத்தொகையினை மாநகராட்சி பொது நிதியில் இருந்து அல்லது அரசிடம் நிதி உதவி பெற்று இரயில்வே துறைக்கு வழங்கிடவும், சுரங்கப்பாதை அமைக்க வேண்டி தென்னக இரயில்வே துறைக்கு கடிதம் எழுத மாமன்ற தீர்மானம் எண். 126 நாள். | 208)இப்பொருள் தொடர்பாக 30.5.2022 அன்று நடைபெற்ற மாமன்ற கூட்டத்தின் 126ஆம் எண் தீர்மானத்தில் தென்னக இரயில்வே துறையினரிடம் மேற்படி இடத்தில் சுரங்க பாதை (Sub way) அமைக்க அனுமதி கோரப்பட்ட நிலையில் மேற்படி இரயில்வே துறையினரிடமிரு |

| | | |
|---|---|---|
| | **30.05.2022** ன் படி அனுமதி பெறப்பட்டுள்ளது. இந்நிலையில் மாண்புமிகு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் அவர்களின் **20.07.2022** ம் தேதிய கடிதத்தில் குறிப்பிடப்பிட்டுள்ளபடி சுரங்கப்பாதை (Sub-way) க்கு பதிலாக இரயில்வே மேம்பாலம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே தூத்துக்குடி – மீளவிட்டான் இரயில் நிலையத்திற்கும் இடையே கி.மீ. **649/700–800** இரயில்வே வழித்தடத்தில் இரயில்வே மேம்பாலம் (Over Bridge) தென்னக இரயில்வே துறையினர் மூலமாக அமைப்பதற்கும், இரயில்வே மேம்பாலம் (Over Bridge) அமைப்பதற்குரிய மதிப்பீட்டுத்தொகையினை மாநகராட்சி பொது நிதியில் இருந்து அல்லது அரசிடம் நிதி உதவி பெற்று இரயில்வே துறைக்கு வழங்கிடவும், இரயில்வே மேம்பாலம் (Over Bridge) அமைக்க வேண்டி தென்னக இரயில்வே துறைக்கு கடிதம் எழுத மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு :** மாமன்றம் அனுமதிக்கலாம் .<br><br>எப்1 / 2129 /2022 | ந்து வரப்பெறும் தகவலின் அடிப்படையில் செயல்பட அனுமதிக்கப்பட்டது. |
| | **11)** தூத்துக்குடி மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கட்டப்படும் அனுமதியற்ற கட்டுமானங்கள், அனுமதிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறுதலாக கட்டி வரும் கட்டிடங்கள் மீது உரிய அறிவிப்பு வழங்க நடவடிக்கை எடுக்கவும், வார்டுகளில் அவ்வப்போது ஏற்படும் ஆக்கிரமிப்புகளை கண்டறிந்து அறிவிப்பு வழங்கி ஆக்கிரமிப்புனை அகற்றும் பணி மேற்கொள்ளவும், மாநகராட்சிக்கு சொந்தமான இடங்களை கண்டறிந்து பாதுகாக்க நடவடிக்கை எடுக்கவும் இளநிலை / உதவி பொறியாளர்களுக்கு (நகரமைப்பு) உதவியாக 5 தொழில்நுட்ப உதவியாளர்கள் தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அவர்களின் தினக்கூலி அடிப்படையில் நகர்ப்புற வாழ்வாதார மையம் (City Lively hood Centre) மூலம் தற்காலிகமாக பணியமர்த்தப்பட்டு பணிபுரிந்து வருகிறார்கள். தற்போது தற்போது மாவட்ட ஆட்சியரால் | 209)அலுவலகக் குறிப்புஅனுமதிக்கப் பட்டது |

அனுமதிக்கப்பட்ட 2022–23 ஆண்டிற்கு தினக்கூலி ஊதிய நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியாளர்களின் பணி விவரம் | எண்ணிக்கை | பழைய ஊதிய விலை பட்டியல் | தற்போது உள்ள மாவட்ட ஆட்சியர் அவர்களின் ஊதிய விலை பட்டியல் |
|---|---|---|---|---|
| 1 | தொழில்நுட்ப உதவியாளர்கள் (பட்டயபடிப்பு) | 5 | 481 | 573 |
| 2 | தொழில்நுட்ப உதவியாளர்கள் (பட்டப்படிப்பு) | - | 633 | 755 |

மேற்கண்ட விவரப்படி பணியமர்த்தப்பட்ட 5 தினக்கூலி பணியாளர்களுக்கு தற்போதைய 2022–23 ஆண்டிற்கான திருத்திய ஊதிய பட்டியலின் அடிப்படையில் ஊதியம் நிர்ணயம் செய்யவும். அதற்கான கூடுதல் உத்தேச செலவினம் ரூ. 7.00 /– இலட்சத்தினை மாநகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:** மாமன்றம் அனுமதிக்கலாம் .

எப்1/288/2021

12) இம்மாநகராட்சி வல்லநாடு தலைமை நீரேற்று நிலையம், குடிநீர் சுத்திகரிப்பு நிலையம், மற்றும் மாநகரப் பகுதிகளில் அமைந்துள்ள மேல்நிலை நீர்தேக்க தொட்டிகள் ஆகியவற்றின் குடிநீர் விநியோக இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளுக்கு 08.04.2022 ம் தேதிய மாமன்ற தீர்மான எண்.75 ன் படி தினக்கூலி பணியாளர்கள் நகர்ப்புற வாழ்வாதார மையத்தின் (City Livelihood Centre) மூலம்

210)அலுவலகக் குறிப்புஅனுமதிக்கப் பட்டது

கீழ்கண்ட பணியிடங்களில் பணியமர்த்தப்பட்டுள்ளனர். தற்போது District Collector approved rate **2022–23** ம் ஆண்டின்படி தினக்கூலி அடிப்படையில் ஊதிய நிர்ணயம் செய்யப்பட வேண்டியுள்ளது.

| வ.எண் | பணியாளர்களின் பணி விவரம் | பணியாளர்களின் எண்ணிக்கை | பழைய ஊதிய விலை பட்டியல் | தற்போது உள்ள மாவட்ட ஆட்சியர் அவர்களின் ஊதிய விலை பட்டியல் (2022–23) |
|---|---|---|---|---|
| 1 | Electrician | 1 | 453 | 554 |
| 2 | Electrician Helper | 6 | 400 | 490 |
| 3 | Cleaner/Lab Attendant | 3 | 354 | 433 |
| 4 | Cleaner/Water Carrier | 3 | 354 | 433 |
| 5 | Fitter | 1 | 453 | 554 |
| 6 | Cleaner/Watch Man | 2 | 354 | 433 |
| 7 | Cleaner | 48 | 354 | 433 |

மேற்கண்ட விவரப்படி பணியமர்த்தப்பட்ட **64** தினக்கூலி பணியாளர்களுக்கு தற்போதைய **2022–23** ஆண்டிற்கான திருத்திய ஊதிய பட்டியலின் அடிப்படையில் ஊதியம் நிர்ணயத்ம செய்யவும். அதற்கான கூடுதல் உத்தேச செலவினம் ரூ.**52,63,056/–** இலட்சத்தினை மாநகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து செலவு செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலக குறிப்பு** மாமன்றம் அனுமதிக்கலாம்..

இ3/3874/2018

| | | |
|---|---|---|
| | **13)** இம்மாநகராட்சி அலுவலக பணிக்கு பயன்படுத்தப்பட்டு வரும் கணினிகள், பிரிண்டர், ஸ்கேனர், மடிக்கணினி போன்ற உபகரணங்களுக்கு வருடாந்திர பராமரிப்பு பணி M/s.Golden info Tech நிறுவனத்திற்கு 20.10.2019ல் வேலை உத்தரவு வழங்கப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்பட்டு, கடந்த மூன்று ஆண்டுகளாக பணி நீட்டிப்பு செய்து வழங்கப்பட்டு, வருடாந்திர பராமரிப்பு, மேற்கண்ட நிறுவனத்தின் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில் 19.10.2022 அன்று முடிவடைகிறது.<br><br>இவ்வலுவலக பணிக்கு பயன்படுத்தப்பட்ட வரும் கணினிகள் – 59 எண்ணம், லேப்டாப் – 3 எண்ணம், Dot Matrix Printer – 14 எண்ணம், Laser Jet Printers – 66 எண்ணம், ஸ்விட்ச் – 17 எண்ணம் போன்ற உபகரணங்களுக்கு வருடாந்திர பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவதற்கு, உத்தேசமாக ரூ.5.70 இலட்சம் ஆகும். மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தபுள்ளி கோரவும் அதற்கான செலவின தொகையை பொதுநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு:<br>1. மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.<br>2. மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்கள் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை மேற்கொண்டதற்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>இ5/3789 / 2022 | **211)** அலுவலகக் குறிப்புஅனுமதிக் கப் பட்டது |
| | **14)** தூத்துக்குடி மாநகராட்சிக்குப் பாத்தியப்பட்ட புதிய பேருந்து நிலைய இரு சக்கர வாகன காப்பகத்தில் 03.09.2019 முதல் துறை ரீதியாக இருசக்கர வாகன நுழைவு கட்டணம் வசூல் கணினி மூலம் மேற்கொள்ளப்பட்டுவருகிறது. மேற்படி கட்டண வசூல் பணி சுழற்சி முறையில் (3Shift) 6 கணினி இயக்குபவர்கள் (Computer Data Entry) மற்றும் வாகன காப்பகத்தில் இருசக்கர வாகனங்களை எடுத்து வைப்பதும், ஒழுங்குபடுத்தவும் 3 களப்பணியாளர்கள் பணி அமர்த்தப்பட்டுள்ளது. மேற்படி 6 கணினி இயக்குபவர்களுக்கு 2019–2020ம் ஆண்டு தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை ஆணையின்படி, நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலியான ரூ.481/–ம் மேற்படி களப்பணியாளர்களுக்கு இம்மாநகராட்சியில் டெங்கு கொசு ஒழிப்பு | 212) அலுவலகக் குறிப்புஅனுமதிக் கப் பட்டது |

பணியாளர்களுக்கு வழங்கப்படும் தினக்கூலியான ரூ.320/– அடிப்படையில் ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டு நகர்ப்புற வாழ்வாதார மையம் மூலம் பணியமர்த்தப்பட்டு மாத ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது.

2022–2023ம் ஆண்டு தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணையின்படி, கணினி இயக்குபவர்களுக்கு நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலியான நாள் ஒன்றுக்கு ரூ.573/–ம், களப்பணியாளர்களுக்கும் நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலியான நாள் ஒன்றுக்கு ரூ.417/–ம் கீழ்க்கண்ட அட்டவணைப்படி ஊதியம் வழங்குவதற்கு மாமன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | பணி விபரம் | பணியாளர்களின் எண்ணிக்கை | தற்போது வழங்கப்பட்டு வரும் ஊதியம் (2019–2020) ரூ. | 2022–2023ம் ஆண்டு நிர்ணயம் செய்யப்பட்ட ஊதியம் ரூ. | 12 மாதம் (365 நாட்கள்) உத்தேச செலவினம் ரூ. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1. | கணினி இயக்குபவர்கள் | 6 | 481/– | 573/– | 12,54,870/– |
| 2. | களப்பணியாளர்கள் | 3 | 320/– | 417/– | 4,56,615/– |
| | | | | மொத்தம் ரூ. | 17,11,485/– |

2022–2023ம் ஆண்டின் தூத்துக்குடி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி விகிதப்பட்டியலின்படி, மேற்படி தினக்கூலி பணியாளர்களுக்கு 26.09.2022 முதல் 25.09.2023 வரையிலான காலத்திற்கு ஊதியம் வழங்குவதற்கு உத்தேச செலவினம் ரூ.17.00 இலட்சத்துக்கு மாமன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| | **அலுவலக குறிப்பு** மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>அ16/2963/2019 | |
| | 15) இம்மாநகராட்சிக்கு தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தின் மூலம் தேசிய தூய்மை காற்றுத் திட்டத்தின் கீழ் ரூ.3.06 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அந்நிதியில் இம்மாநகராட்சியினை மாசில்லா நகரமாக மாற்ற பல்வேறு பணிகள் நடைபெற்றுவருகிறது. இந்நிலையில் மாநகராட்சியின் முக்கிய சாலையான போல்பேட்டை 60 அடி சாலையின் இரு புறங்களிலும் பேவர் பிளாக் அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.49.00 லட்சம் தேசிய தூய்மை காற்று திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியில் பணி மேற்கொள்ள மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு:** மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>இ3/01212/2021 | 213)அலுவலகக் குறிப்புஅனுமதிக் கப் பட்டது |
| | 16) இம்மாநகராட்சிக்கு தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தின் மூலம் தேசிய தூய்மை காற்றுத் திட்டத்தின் கீழ் ரூ.3.06 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அந்நிதியில் இம்மாநகராட்சியினை மாசில்லா நகரமாக மாற்ற பல்வேறு பணிகள் நடைபெற்றுவருகிறது. இந்நிலையில் மாநகராட்சியின் முக்கிய சாலையான போல்பேட்டை செல்வநாயகபுரம் சாலையின் இரு புறங்களிலும் பேவர் பிளாக் அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.42.53 லட்சம் தேசிய தூய்மை காற்று திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியில் பணி மேற்கொள்ள மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு:** மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>இ3/01212/2021 | 214)அலுவலகக் குறிப்புஅனுமதிக் கப் பட்டது |
| | 17) இம்மாநகராட்சி மைய அலுவலகம், மண்டல | 215) அலுவலகக் |

| | | |
|---|---|---|
| | அலுவலகங்கள் மற்றும் பூங்காக்களில் பாதுகாப்புபணி மேற்கொள்ள மாநகராட்சி மூலம் பாதுகாப்பு பிரிவு (Corporation Security wing) 2019 ஆண்டு முதல் தோற்றுவிக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேற்படி பாதுகாப்பு பிரிவில் பணியாளர்கள் தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள நகர்ப்புற வாழ்வாதார மையத்தின் (CLC) மூலம் முற்றிலும் தற்காலிகமாக தினக்கூலி அடிப்படையில் நியமிக்கப்பட்டு தற்போது 17 நபர்கள் பணிபுரிந்து வருகின்றார்கள். மேற்படி பணியாளர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர், தூத்துக்குடி அவர்களின் 16.09.2019 ஆம் தேதிய செயல்முறையின்படி தினக்கூலி பணியாளர்களுக்கான ஊதியம் நாளொன்றுக்கு ரூ.381/– நிர்ணயம் செய்யப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது.<br>இந்நிலையில் கடந்த மூன்று வருடங்களாக மேற்படி குறைந்தபட்ச ஊதியம் வழங்கப்பட்ட நிலையில் தற்போது மாவட்ட ஆட்சித்தலைவர், தூத்துக்குடி அவர்களின் செயல்முறை எண்.கே3/16617/2022, 29.07.2022 ஆம் நாளிட்ட செயல்முறையில் 2022–23 ஆம் ஆண்டுக்கான குறைந்தபட்ச ஊதியம் பணிகள் வாரியாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதில் மேற்படி பாதுகாப்பு பணிகள் மேற்கொள்ளும் காவலர்களுக்கு நாளொன்றுக்கு ரூ.454/– என நிர்ணயம் செய்து உத்தரவிட்டுள்ளது.<br>எனவே இம்மாநகராட்சியில் தற்போது பாதுகாப்பு காவலர் பணிபுரிந்து வரும் 17 காவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் 2022–23 ஆம் ஆண்டுக்கான குறைந்தபட்ச ஊதிய விகித அட்டவணையின்படி நாளொன்றுக்கு ரூ.454/– வீதம் நிர்ணயம் செய்து ஓராண்டுக்கு ஆகும் செலவினத்தொகை ரூ.165710/–ஐ, மாநகராட்சி பொதுநிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் நகர்ப்புற வாழ்வாதார மையத்தின்(CLC) ஒப்பந்தப்படி மேற்படி செலவினத்தினை மேற்கொண்டு அதற்கான 2% சேவை கட்டணம் நகர்ப்புற வாழ்வாதார மையத்திற்கு வழங்கிடவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>1. பாதுகாப்பு பிரிவு பாதுகாவலர்களுக்கான ஊதியம் நாளொன்றுக்கு ரூ.454/–நிர்ணயம் செய்து ஓராண்டுக்கான செலவினத்தொகை ரூ.165710/– ஐ மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி ஓராண்டு செலவினத்தொகைக்கான 2% சேவை கட்டணம் நகர்ப்புற வாழ்வாதார மையத்திற்கு (CLC) | குறிப்பு அ மற்றும் ஆ அனுமதிக்கப் பட்டது |

| | | |
|---|---|---|
| | வழங்கிட மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>சி1 / 2926/2019 | |
| | **18)** தூத்துக்குடி மாநகராட்சிக்குப் பாத்தியப்பட்ட தச்சர் தெரு வணிக வளாகத்தில் தரைதளம் மற்றும் முதல் தளத்துடன் கூடிய கடை எண்.D1 யினை தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள மூன்று முகாம்களை சேர்ந்த மகளிர் தொழில் முனைவோராகிய சாதனைப்பூக்கள் இலங்கை தமிழர் பாரம்பரிய உணவு உற்பத்தி குழுவிற்கு மேற்படி கடையினை ஒதுக்கீடு செய்தும் இலங்கை தமிழர் பாரம்பரிய உணவைப் பாதுகாக்கும் வகையில் "ஓலைப்புட்டு" என்ற பெயரில் உணவகம் நடத்திட இலங்கை தமிழர் மகளிர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திட உதவி செய்திடுமாறும், மேலும் ஒதுக்கீடு செய்யப்படும் கடைக்கு மாநகராட்சியால் நிர்ணயம் செய்யப்படும் மாத வாடகையை செலுத்திட இசைவு தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில் மகளிர் குழுவின் வாழ்வாதாரத்தைக் கருத்தில் கொண்டு மேற்படி கடைக்கு நிர்ணயம் செய்யப்பட்ட காப்புத் தொகை மற்றும் முன்பண வைப்புத் தொகையை செலுத்துவதில் இருந்து விலக்கு அளிக்குமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. எனவே மேற்படி மகளிர் குழுவின் கோரிக்கையானது மாமன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :** மாமன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.<br>அ16/2380/2022 | **216)** அலுவலகக் குறிப்பு இலங்கை தமிழர் மகளிர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் முன் வைப்பு தொகை மற்றும் காப்பு தொகை செலுத்துவதிலிருந்து விலக்கு அளித்து நிர்ணயிக்கப்பட்ட மாத வாடகை பெறுவதற்கான உரிமம் வழங்க அனுமதிக்கப்பட்டது |

தூத்துக்குடி மாநகராட்சி
நாள்:29.09.2022

மேயர்
தூத்துக்குடி மாநகராட்சி